காவிரியில் நீர்வரத்து அதிகரிப்பு : உயர்கிறது மேட்டூர் அணை நீர்மட்டம்

First Published : 11 Aug 2012 04:22:24 PM IST

ஈரோடு, ஆக., 11 : கபினி மற்றும் கிருஷ்ணராஜ சாகர் அணைகள் முழுவதுமாக நிரம்பிவிட்டதால் பாதுகாப்புக் கருதி உபரி நீர் காவிரியில் திறந்துவிடப்பட்டு வருகிறது. இதனால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவும் அதிகரித்துள்ளது. தற்போது மேட்டூர் அணைக்கு விநாடிக்கு 3,727 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் தற்போது 73.35 அடியாக உள்ளது.

சம்பா சாகுபடியை தொடங்க அரசு நடவடிக்கை தேவை: ராமதாஸ்

First Published : 10 Aug 2012 12:29:22 PM IST

Last Updated : 10 Aug 2012 12:42:09 PM IST

சென்னை, ஆக. 10: மேட்டூர் அணையில் இருந்து தண்ணீரை திறந்து விடும் தேதியை அறிவித்து, சம்பா சாகுபடியை தொடங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் கோரியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், காவிரி பாசன மாவட்டங்களில் குறுவை சாகுபடி செய்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ம் தேதி மேட்டூர் அணையில் இருந்து காவிரி ஆற்றில் தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு போதிய தண்ணீர் இல்லாததால் மேட்டூர் அணை குறித்த காலத்தில் திறக்கபடவில்லை. இதனால் பெரும்பாலான பகுதிகளில் குறுவை சாகுபடி செய்யப்படவில்லை.

ஆடி மாதம் தொடங்கியும் மேட்டூர் அணை திறக்கபடுவதற்கான அறிகுறிகள் தென்படாததால் இந்த ஆண்டு சம்பா சாகுபடியும் பொய்த்துவிடுமோ என்ற கவலையில் தமிழக விவசாயிகள் ஆழ்ந்திருந்தனர். இந்த நேரத்தில் இயற்கையின் கொடையால் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழை காரணமாக கர்நாடகத்தில் உள்ள அணைகள் அனைத்தும் நிரம்ப தொடங்கியுள்ளன.

கர்நாடக அரசும் அதன் தேவைக்கு போக, நிரம்பி வழியும் உபரி நீரை மட்டும் தமிழகத்திற்கு திறந்து விட்டிருக்கிறது. கபினி அணையில் இந்து கடந்த 3 நாட்களாக வினாடிக்கு 12 ஆயிரம் கன அடி என்ற அளவில் தண்ணீர் திறக்கப்படுவதால், அந்த நீர் இன்று இரவுக்குள் மேட்டூர் அணையை வந்தடையும் என்று எதிர்பார்க்கபடுகிறது.

கர்நாடகத்தில் உள்ள கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்தும் விரைவில் அதிக அளவு தண்ணீர் திறக்கப்படும் என்றும், இதனால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் அடுத்த ஒரு வாரத்தில் 90 அடி என்ற அளவை தாண்டும் என்றும கூறப்படுகிறது.
கர்நாடகத்தில் இருந்து கிடைக்கும் தண்ணீரைக் கொண்டும், மேட்டூர் அணையில் ஏற்கனவே உள்ள தண்ணீரை கொண்டும் சம்பா சாகுபடியை சிக்கலின்றி மேற்கொள்ள முடியும் என நீர்வளத்துறை வல்லுநர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பா சாகுபடிக்கு தேவையான பணிகளை காவிரி பாசன மாவட்ட விவசாயிகள் தொடங்குவதற்கு வசதியாக மேட்டூர் அணை திறக்கப்படும் தேதியை தமிழக அரசு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

மேலும் சம்பா சாகுபடிக்கு தேவையான விதைநெல், நுண்ணூட்டச்சத்து உரம் உள்ளிட்ட இடுபொருட்கள் அடங்கிய பையை விவசாயிகளுக்கு அரசு இலவசமாக வழங்க வேண்டும்.

குறுவை சாகுபடி பொய்த்து போனதால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அவர்களது பழைய பயிர்கடனை தள்ளுபடி செய்துவிட்டு, புதிதாக பயிர்க்கடன் வழங்கவும், கூட்டுறவு சங்கங்கள் மூலம் மானிய விலையில், தட்டுபாடின்றி உரங்களை வழங்கவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பா.ம.க., நிறுவனர் ராமதாஸ் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளார்.

## பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 37.14 அடி

First Published : 11 Aug 2012 12:59:06 PM IST

ஈரோடு, ஆக.10: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 37.14 அடியாக இருந்தது.
அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 197 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 850 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. கால்வாயில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையின் நீர் இருப்பு 2.02 டி.எம்.சி.

தலையங்கம்: பாவம், ஈமு கோழிகள்!

First Published : 11 Aug 2012 01:12:39 AM IST

Last Updated : 11 Aug 2012 02:03:51 AM IST

சென்ற ஆண்டு ஆகஸ்ட் 5-ம் தேதி மகாராஷ்டிர மாநில சட்டப்பேரவையில் உள்துறை அமைச்சர் ஆர்.ஆர். பாட்டீல் ஓர் அறிவிப்பு செய்தார்: "ஈமு கோழி வளர்ப்பு தொடர்பாக நாசிக் வட்டாரத்தில் சுமார் 2,000 விவசாயிகள், ரூ.200 கோடி அளவுக்கு ஏமாற்றப்பட்டுள்ளதாக வந்த புகார்களை விசாரிக்க சிஐடி போலீஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது' என்பதுதான் அது.

இதேபோன்று சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு, ஈமு கோழி வளர்ப்பு தொடர்பான விளம்பரத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்களது படத்தைப் பயன்படுத்தியதாக, தமிழ்நாட்டில் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு ஈமு கோழி நிறுவனத்தின் மீது வழக்குத் தொடரப்பட்டது. இது தவறுதலாக நடந்துவிட்டதாக அந்த நபர் மன்னிப்புக் கோரிய செய்தியும் வெளியாகியது.

இந்த இரண்டு சம்பவங்களையும் பத்திரிகைகள் மூலம் அறியவந்தவர்களுக்கு, இதில் ஏதோ குளறுபடி இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள அதிக அறிவும் ஆழ்ந்த அனுபவமும் தேவையில்லை. ஆனாலும் தமிழ்நாட்டில், பணம்படைத்த படித்தவர்களும் படிக்காத விவசாயிகளும் பல கோடி ரூபாயை ஈமு கோழி வளர்ப்பு திட்டத்தில் இழந்து நிற்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, ""........மூடர் "விதிவசம்' என்கிறார்கள். ஆமடா விதிவசம்தான். அறிவில்லாதவனுக்கு இன்பம் இல்லை என்பது ஈசனுடைய விதி", என்கிற பாரதியாரின் வசனக் கவிதைதான் நினைவுக்கு வருகிறது.

தற்போது பெருந்துறை சுசி ஈமு கோழிப்பண்ணை விவகாரத்தில் மட்டும் 12,000 பேர் சுமார் ரூ.200 கோடி முதலீடு செய்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. கூட்டம் கூட்டமாக வந்து புகார் மனுக்களைக் கொடுக்கிறார்கள். இவர்கள் ரூ.1.5 லட்சம் முதல், ரூ.30 லட்சம் வரை முதலீடு செய்துள்ளனர்.

முதலீடு செய்தவர்களுக்கு ஈமு கோழிகள் தரப்படும். அதை வளர்த்துக் கொடுக்க வேண்டும். இதற்காக மாதம்தோறும் கோழிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஊக்கத் தொகை, போனஸ் என்றெல்லாம் ஒவ்வொரு நிறுவனமும் ஒரு தொகையைச் சொல்லி, மக்களைக் கவர்ந்துள்ளன. இப்போது ஊக்கத்தொகை கிடைக்கவில்லை என்கின்றபோது முதலீட்டைத் திரும்பக் கேட்கின்றனர் பணம் கொடுத்தவர்கள். ஆனால், முதலீடு வாங்கியவர்களையும் காணோம், முதலீடாகப் பெற்ற தொகை எங்கே போனது என்பதும் தெரியவில்லை. பாவம்,

ஈமு கோழிகள் தீனி போடக்கூட ஆள் இல்லாத நிலையில் தவிக்கின்றன. ஆனால் கால்நடைத்துறை சொல்கிறது, அவை 20 நாள்களுக்கு வெறும் தண்ணீரை மட்டுமே அருந்தி வாழும் என்று!

இதேபோன்று மக்கள் ஏமாந்துபோன சூழ்நிலை, அதிக வட்டி தருவதாக வாக்குறுதி அளித்த நிறுவனங்களில் முதலீடு செய்தவர்களுக்கு சில ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டது. உறுதி அளித்தபடியே அதிக வட்டியை தொடக்கத்தில் இந்நிறுவனங்கள் கொடுத்தன. ஆனால், அடுத்த சில ஆண்டுகளில் முதலீடு முழுவதையும் இழக்க நேரிட்டது. இந்த நிறுவனங்கள் வேறு தொழில்களில் முதலீடு செய்வதாகச் சொல்லிக்கொண்டாலும், உண்மையில் அவ்வாறு செய்யவில்லை. மக்கள் கொடுத்த பணத்தை அப்படியே அவர்களுக்கு வட்டிக்காகத் திருப்பிவிட்டன. கடைசியில் மொத்தமாகச் சுருட்டிக்கொண்டன.

ஈமு கோழி வளர்ப்பில், முதலீட்டுக்கு இணையான ஈமு கோழிகள் முதலீட்டாளர் வசம் இருந்தாலும், அதனால் எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை. ஈமு கோழிக்கான சந்தை இந்தியாவில் இல்லை. இந்தியாவில் ஈமு கோழிக்கறி உண்பாரும் யாரும் கிடையாது.

ஈமு கோழியை உயிருடன் ஏற்றுமதி செய்வதோ அல்லது வெட்டுவதோ கூடாது என்று ஆஸ்திரேலிய அரசு தடை விதித்தபோது, ஈமு கோழி வளர்ப்பு வெளிநாடுகளில் நடைபெறத் தொடங்கியது. அமெரிக்காவிலும்கூட இந்த முயற்சிகள் நடந்தன. ஆனால், ஈமு கோழியை வளர்த்து அதன் இறைச்சியில் கிடைக்கும் பணத்தைவிட, மாட்டிறைச்சி மூலம் அதிக வருவாய் கிடைப்பதை நடைமுறையில் உணர்ந்த அமெரிக்கர்கள் இத்திட்டத்தைக் கைவிடத் தொடங்கினர். கடைசியாக இந்தியாவில் இந்தத் திட்டத்தை இறக்குமதி செய்தார்கள்.

ஈமு கோழியின் விலை அதிகம் என்பதும், இதன் இறைச்சி, எண்ணெய், நகங்கள் எல்லாமும் விலை போகும் என்பதும் உண்மைதான். ஆனால், இதை யார் வாங்குகிறார்கள், சந்தையின் தேவைஅளவு என்ன என்று எந்த உண்மைகளையும் தெரிந்துகொள்ளாமல், முதலீடு செய்தவர்களின் அறியாமைதான் மோசடி செய்தவர்களின் முதலீடு.

"விவசாயத்தில் நஷ்டம். ஆகவே இதிலாவது கொஞ்சம் பணம் பார்க்கலாம் என்றுதான் ஈமு கோழி வளர்ப்புக்கு ஆட்பட்டோம்' என்று அப்பாவித்தனமாக மக்கள் சொல்கிறார்கள். விவசாயம் பொய்த்தது என்பதற்காக பொய்யான திட்டங்களில் முதலீடு செய்யலமா? வானம் ஒருமுறை பொய்த்தாலும் மறுமுறை அள்ளிக்கொடுக்கும். இந்த மோசடிக்காரர்கள் இருந்த அனைத்து முதலீட்டையும் அல்லவா துடைத்துச் சென்றுவிட்டனர்.

தேக்கு மரம் வளர்த்து, 20 ஆண்டுகளுக்குப் பிறகு அதை வெட்டிப் பணம் தருகிறோம் என்கிற திட்டத்தில் ஒரு கன்றுக்கு சிறிய தொகை செலுத்தினால் போதும் என்றார்கள். 20 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த மரம் இருக்குமா, நாம் இருப்போமோ, அல்லது அந்த நிறுவனம்தான் இருக்குமா என்று எதையுமே யோசிக்காமல் முதலீடு செய்தார்கள் தமிழர்கள்.

வட்டியைக் காட்டி, மரத்தைக் காட்டி, தங்கத்தைக் காட்டி, இறைச்சியைக் காட்டி ஏமாற்றியவர்கள் இப்போது மண்ணைக் காட்டியும் ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இது வேளாண் நிலமா, வீட்டுமனைக்கான அங்கீகாரம் பெற்றிருப்பது உண்மையானதுதானா?

என்கின்ற எந்தக் கேள்விமுறையும் இல்லாமல் மனைகளை விற்கிறார்கள். "மண்ணுல போட்டா வீண் போகாது' என்பது விவசாயத்துக்கான பழமொழி. வீட்டுமனைக்கானது அல்ல.

**யூரியா உர மூட்டைகள் ரயிலில் முண்டியம்பாக்கத்திற்கு வந்தது**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 12,2012,23:45 IST

விக்கிரவாண்டி : விழுப்புரம் மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான யூரியா ரயிலில் வந்து சேர்ந்தது.

விழுப்புரம் மாவட்டத்தில் தற்போது பரவலாக மழை பெய்து வருகிறது. விவசாயிகள் உழவு பணிகளை துவக்கி உள்ளனர். விவசாய பயிர்களுக்கு தேவையான அடியுரமான யூரியா தேவையை பூர்த்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி மெட்ராஸ் பெர்டிலைசர்ஸ் கம்பெனியில் தயாரிக்கப்பட்ட 1,250 டன் யூரியா நேற்று முன்தினம் மாலை சென்னை துறை முகத்திலிருந்து ரயில் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. தலா 50 கிலோ வீதம் 25 ஆயிரம் மூட்டைகள் 21 வேகனில் ஏற்றப்பட்டு நேற்று காலை முண்டியம்பாக்கம் ரயில் நிலையத்தை வந்தடைந்தது.

நிறுவனத்தின் விற்பனை அதிகாரிகள் குமரேசன், ராஜா, பார்த்தீபன் மேற்பார்வையில் யூரியா மூட்டைகள் ரயிலிலிருந்து, லாரியில் ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டது.

**கறிக்கோழி வளர்ப்பு சங்கம் தமிழக முதல்வருக்கு நன்றி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 12,2012,23:45 IST

கருத்தை பதிவு செய்ய

விழுப்புரம் : ஒப்பந்த கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் நலச் சங்கத்தினர் முதல்வருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சங்கத்தின் தலைவர் பூபாலன் வெளியிட்டுள்ள அறிக்கை:

விழுப்புரம் மாவட்டத்தை தலைமையிடமாக கொண்டு, கறிக்கோழி வளர்ப்பு மண்டலத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது. விழுப்புரம், கடலூர், புதுச்சேரி மண்டலங்கள் அமைக்க ஆணையிட்ட தமிழக முதல்வர் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சருக்கு ஒப்பந்த கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் நலசங்கம் சார்பில் நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

இத்தொழிலில் ஈடுபட்டு நலிவடைந்த கறிக்கோழி பண்ணை விவசாயிகளுக்கு, வங்கிகளில் முன்னுரிமை வழங்கவேண்டும். விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் தானே புயலால் பாதிக்

கப்பட்ட பண்ணையா ளர்களுக்கு உடனடியாக நிவா ரணமும், மறுவாழ்வும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தரம் இல்லாத மக்காச்சோள கதிர்கள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2012,04:25 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: தர்மபுரி, சந்தைப்பேட்டையில், விற்பனைக்காக மக்காச்சோள கதிர்கள் அதிகளவில் குவிக்கப்பட்டுள்ளது.ஊட்டச்சத்துகள் மிகுந்த மக்காச்சோள கதிர்களை, பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி வருவதால், மக்காச்சோள விற்பனை அதிகரித்துள்ளது. தர்மபுரியை சேர்ந்த வியாபாரிகள், சத்தியமங்கலம் பகுதியில் இருந்து மக்காச்சோள கதிர்களை வாங்கி, வாகனம் மூலம், தர்புரிக்கு எடுத்து வருகின்றனர்.தர்மபுரி சந்தைப்பேட்டையில் இறக்கப்படும் இந்த மக்காச்சோள கதிர்களை, தரம் பிரித்து, தர்மபுரி நகர், மற்றம் மாவட்டத்தின் பிற பகுதிகளில் இருந்து வரும் வியாபாரிகளுக்கு, தாங்கள் வாங்கி வந்த விலையை விட, சற்று கூடுதலாக வைத்து விற்பனை செய்தனர். இங்கு, ஆண்டு முழுவதும் மக்காச்சோளம் விறபனையில், வியாபாரிகள் ஈடுபடுகின்றனர். இந்தாண்டு போதிய பருவ மழையில்லாதல், சரியாக விளையாத, சிறிய கதிர்களை வாங்குவதால், தங்களுக்கு இழப்பு ஏற்படுவதாக, மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர்.தர்மபுரியை சேர்ந்த வியாபாரி மூர்த்தி கூறியதாவது:சத்தியமங்கலம் மற்றும் அதன் அருகில் உள்ள பகுதிகளில், விவசாயிகளிடம் இருந்து மொத்தமாக மக்காச்சோள கதிர்களை வாங்கி வருகிறோம். இந்தாண்டு கால்நடை தீவனத்திற்காக, அதிகளவில் மக்கச்சோளத்தை வாங்கிச் செல்வதால், விலை உயர்ந்துள்ளது.பருவ மழை சரிவர பெய்யாததால், கதிர்கள் வழக்கத்தை விட சிறியதாகவும், சில கதிர்கள் பதராகவும் உள்ளது. விவசாயிகளிடம் மொத்தமாக வாங்குவதால், தரம் பிரிக்க முடியாது. தர்மபுரியில் இறக்கி தரம் பிரிப்பது வழக்கம். தற்போது வாங்கி வந்து தரம் பிரித்ததில், பெரும்பால கதிர்கள் போதிய விளைச்சல் இன்றியும், சிறியதாகவும் உள்ளது.இதனால், எங்களிடம் மக்காச்சோள கதிரிகளை வாங்கும் வியாபாரிகள், சரியாக விலையாத கதிர்களை வாங்குவதில்லை. சிறிய கதிர்களையும், நாங்கள் வாங்கிய விலையை விட குறைவாக கேட்கின்றனர். தொடர்ந்து கதிர்களை அதிக நாட்கள் வைத்தால் வீணாகிவிடும் என்பதால், அவர்கள் கேட்கம் விலைக்கு, வேறு வழியின்றி விற்பனை செய்து வருகிறோம்.தரமான கதிர் ஒன்று இரண்டு ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம். சில மாதங்களாக மக்காச்சோள மொத்த வியாரிகள் இதுபோன்ற இழப்புகளால், பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.இவ்வாறு அவர் கூறினார்.

**வாத்து முட்டை தொடர் தட்டுப்பாடு தேவை அதிகரிப்பால் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2012,02:36 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: மருத்துவ குணம் கொண்ட வாத்து முட்டைக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது. தேவை அதிகரித்தும், கடும் தட்டுப்பாட்டால், விலையும் தாறுமாறாக உயர்ந்துள்ளது.ஈரோடு மாவட்டம், பெருமாபுதூர், கவுந்தப்பாடி, பவானி, கொடுமுடி உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதியில் வாத்து பண்ணை இயங்கி வருகின்றன. நன்கு வளர்ச்சி அடைந்த வாத்துக்களை பார், ஹோட்டல்களுக்கு இறைச்சிக்காக, பண்ணை உரிமையாளர்கள் விற்பனை செய்கின்றனர்.இந்த முட்டைக்கு நல்ல வரவேற்பு உள்ளதால், வாத்து முட்டை உற்பத்தியில் பலர் தீவிரம் காட்டி வருகின்றனர். இம்முட்டையால், சளி, இருமல், உடல் வலி, உஷ்ணம் போன்றவை குறையும். சுவையும் அதிகமாக இருப்பதால், இதை பலர் விரும்பு உண்பார்கள்.இந்நிலையில், கேரள மாநிலத்தில் வாத்து முட்டைக்கு, 5 ரூபாய் வரை கூடுதல் விலை கிடைப்பதால், பலரும் அங்கு ஏற்றுமதி செய்கின்றனர். உள்ளூரில் தட்டுப்பாடு காரணமாக, மொத்தம் மற்றும் சில்லரை வியாபாரிகள் பாதிப்படைந்துள்ளனர்.ஈரோடு வாத்து முட்டை வியாபாரி முருகேசன் கூறியதாவது: கறிக்கோழி முட்டையை விட, வாத்து முட்டையில் நற்குணங்கள் அதிகம் உள்ளது. ஈரோடு மற்றும் சுற்றுவட்டார பகுதியில் உள்ள வாத்து பண்ணைகள் மூலம் முட்டை கொள்முதல் செய்து, நகரம் மற்றும் கிராமப்புறங்களில் விற்பனை செய்கிறோம்.கேரளாவில் வாத்து முட்டைக்கு நல்ல விலை கிடைப்பதால், பண்ணை உரிமையாளர்கள் பலரும், அங்கு ஏற்றுமதி செய்கின்றனர்.வாத்துக்கோழி, இறச்சிக்காக ஹோட்டல்களுக்கும், பார்களுக்கும் பலர் விற்பனை செய்து விடுகின்றனர். இதனால், முட்டை தட்டுப்பாடு ஏற்பட்டு, விலையும், ஒரு முட்டை, 7 ரூபாய் என உயர்ந்துள்ளது.புரட்டாசி மாதத்தில், வாத்து முட்டை உற்பத்தி அதிகமாக இருக்கும். எனினும், லாபத்தை நோக்கி, கேரளாவுக்கு பலர் முட்டையை அனுப்புவதால், தொடர் தேவை ஏற்படுகிறது.

**கால்நடைகள் குறைந்ததால் மண் வளம் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2012,02:32 IST

கருத்தை பதிவு செய்ய

காங்கேயம்: கால்நடைகள் குறைந்த நிலையில், மண் வளத்தை மேம்படுத்த விவசாயிகள் மண்புழு உரம் இடவேண்டும், என காங்கேயம் வேளாண் உதவி இயக்குனர் அரசப்பன் வேண்டுகோள்

விடுத்துள்ளார்.அவரது அறிக்கையில் கூறியதாவது:நவீன விவசாயத்தில், அதிகளவு ரசாயன உரமிடுதல், பூச்சி மருந்து தெளித்தலால் அதிக பிரச்னைகள் ஏற்படுகிறது. பயிர் வளர்ச்சிக்கு பெரிதும் காரணியாக உள்ள மேல் மண்ணின் வளம் பாதித்து, உற்பத்தி திறன் குறைகிறது. பூச்சி கொல்லிகள் பயன்பாட்டால், உணவு மற்றும் குடிநீர் மாசுபடுகிறது. உயர் விளைச்சல் பெற ரசாயன உரங்கள் பயன்படுத்துவதால், மண்ணில் அங்கக சத்து குறைந்து, விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளதால், விவசாயிகள் மண் வளத்தை பேணுவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். தற்போது கால்நடைகளின் எண்ணிக்கை குறைவதால், போதியளவு அங்கக உரமிட முடியாத நிலை உள்ளது. தற்போது இயற்கை விவசாயத்தில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வரும் நிலையில், இயற்கை விவசாயம் கடைபிடிப்பதிலும், மண்புழு உரம் பெறும் பங்கு வகிக்கிறது.மண்புழு வளர்க்க, ஒரு மீ., அகலம், 30 செ.மீ., உயரமுள்ள சிமென்ட் தொட்டி, மரப்பெட்டி, பிளாஸ்டிக் உபகரணம் பயன்படுத்தலாம். அடிப்பகுதியில், 3 செ.மீ., உயரத்துக்கு மரத்தூள் அல்லது கடலைபொட்டு அல்லது தேங்காய் நார் கழிவு அல்லது கரும்பு தோகையால் முதல் அடுக்கு அமைக்க வேண்டும். அதன் மீது, 3 செ.மீ., மணல் மற்றும், 3 செ.மீ., தோட்ட மண் ஆகியவற்றை கலந்து இரண்டாவது அடுக்காக அமைக்க வேண்டும். படுக்கையின் ஈரப்பதம் சற்று நனைந்த நிலையில் இருக்க வேண்டும். மண்புழுவுக்கு தீனியாக மாடு, ஆடு, பன்றி போன்றவற்றின் சாணங்கள், கோழியின் எச்சங்கள், காய்கறிக்கழிவுகள், பயிர் அறுவடைக்கு பின்பு கிடைக்கும் கழிவுகள், ஆடு, மாடு தீவன கழிவுகளை பயன்படுத்தலாம்.புழு வளர்க்கும் தொட்டிகள் நேரடியாக சூரிய ஒளி விழாமலும், மழையினால் ஏற்படும் நீர்தேக்கத்தை தடுக்கவும், பாதுகாப்பான இடத்தில் அமைக்க வேண்டும். தினமும் மாலை நேரத்தில் புழுக்கள் உட்கொள்ளும் அளவு தீவனத்தை தொட்டியின் மத்தியில் வைக்க வேண்டும். புழுக்கள் உண்ணும் உணவில் ஐந்து முதல் பத்து சதம் அதன் உடலில் சேர்க்கிறது. மீதியுள்ளவற்றை கழிவுகளாக வெளியிடுகிறது. இக்குவியல்களை அவ்வப்போது சேகரித்து உலர்த்தி, 3 மி.மீ., சல்லடையில் சலித்து எஞ்சியவற்றை மண்புழு உரமாக பயன்படுத்தலாம். புழுக்களின் பெருக்கம் அதிகமாகும் போது, புழுக்கள் தேவைப்படும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யலாம். ஒவ்வொரு தொட்டியிலும் நன்கு வளர்ந்த, 200 புழுக்களை பராமரிக்கலாம். மண்புழுவுக்கு உணவாக சாணமிடும்போது, நன்கு மக்கியிருக்க வேண்டும். மண்புழு உரத்தில், தழைச்சத்து, 0.5-1.5சதம், மணிசத்து, 0.1-1.3 சதம், சாம்பல்சத்து, 0.15-0.56 சதம் உள்ளன. இப்புழு மூலம் மண்ணுக்கு அனைத்து சத்தும் கிடைக்கும்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**நேந்திர வாழை விலை வீழ்ச்சி சிறு விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 12,2012,22:35 IST

கருத்தை பதிவு செய்ய

கூடலூர் : நேந்திர வாழை விலை வீழ்ச்சி ஏற்பட்டதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். கூடலூர், பந்தலூர் பகுதிகளில் தேயிலை, காபி, குறுமிளகு போன்று நேந்திர வாழை உற்பத்தியிலும் விவசாயிகள் அதிகளவில் ஈடுப்பட்டுள்ளனர். இங்கு விளையும் நேந்திர வாழை அதிகளவில் கேரளாவுக்கு கொண்டு செல்லப்படுகிறது.

கேரளா மார்க்கெட்டை பொறுத்தே, கூடலூரில் நேந்திர வாழையை விவசாயிகளிமிருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர்.

கேரளாவில் இதன் தேவை அதிரித்துள்ளதால், கடந்த இரண்டு ஆண்டுகளாக கூடலூர் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. கடந்த மாதம் நேந்திர வாழை கிலோவுக்கு 32 ரூபாய்க்கு விலை கிடைத்தது.

இதனால், "ஓணம் பண்டிக்கைக்கு கிலோவுக்கு 50 ரூபாய் வரை விலை கிடைக்க வாய்ப்புள்ளது,' என விவசாயிகள் எதிர்பார்த்தனர்.

ஆனால், கடந்த இரு வாரங்களாக, நேந்திரம் வாழை விலை படிப்படியாக குறைந்து, கடந்த சில நாட்களாக கிலோ 17 ரூபாயிலிருந்து 20 ரூபாய் வரை விலை கிடைத்து வருகிறது. இதனால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். நேந்திர வாழை விளைச்சல் அதிகரித்துள்ளதே விலை வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகும்.

**பெங்களூர் கொய்மலர் நாற்றுகள் கொடைக்கானலில் கிடைக்கும்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2012,02:35 IST

கொடைக்கானல்:""பெங்களூரில் உற்பத்தி செய்யப்படும் கொய்மலரின் நாற்றுக்கள், இனி கொடைக்கானலிலேயே வாங்கி விவசாயிகள் நடவு செய்யலாம்," என தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் ராஜாமுகம்மது தெரிவித்தார்.அவர் கூறியதாவது: கொடைக்கானல் மலைப்பகுதியில் கொய்மலர்கள் சாகுபடி நடக்கிறது. இங்கு விளையும் "அஸ்டோ மேரியா ' பூ மெகா "சைஸ்' சில் பூ பூப்பதால் வெளிமார்க்கெட்டில் கிராக்கி உண்டு. இந்த பூவின் நாற்றுகள், முன்பு 20 ரூபாயக்கு (ஒரு செடி) பெங்களூரிலிருந்து விவசாயிகள் வாங்குவர். தற்போது முதல் முறையாக பிரையண்ட், செட்டியார் பூங்காவில், ஒரு கோடி ரூபாய் மதிப்பில் புதிதாக

அமைக்கப்பட்ட நிழல் வலை வளாகத்தில் உற்பத்தி செய்யப்பட்டு, ஒரு நாற்று ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதை வாங்கி கொய்மலர் சாகுபடியாளர்கள் பயன்பெறலாம், என்றார்.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2012,02:16 IST

திண்டுக்கல்:வேளாண்மை பொறியியல் துறை மூலம் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சியளிக்கப்பட்டது.அஞ்சுகுழிப்பட்டியில் நடந்த முகாமை ஊராட்சித்தலைவர் ராஜசேகரபாண்டியன் துவக்கிவைத்தார். நோக்கம்குறித்து ஒருங்கிணைப்பாளர் பாபுராஜ் பேசினார். காந்திகிராம பல்கலை அறிவியல் மையவிஞ்ஞானி செந்தில், இளநிலை பொறியாளர் முனியப்பன் பேசினர். தொழில்நுட்பட அலுவலர்கள் சுகன் யா, பொன்தமிழரசு ஏற்பாடுகளை செய்திருந்தனர். விவசாயி சின்னையா நன்றி கூறினார்.

**வறட்சியிலும் வரத்து அதிகரிப்பு காய்கறிகள் விலை சரிவு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2012,03:57 IST

தேனி:தேனி மாவட்டத்தில் வறட்சியிலும் காய்கறி வரத்து அதிகரித்துள்ளதால், உழவர்சந்தையில் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது.தேனி, ஓடைப்பட்டி, கோவிந்தநகரம், தர்மாபுரி, தப்புச்குண்டு, தாடிச்சேரி, கடமலைக்குண்டு, பாலசமுத்திரம், எம்.சுப்புலாபுரம், போடேந்திரபுரம், உப்புக்கோட்டை, உப்பார்பட்டி, கூழையனூர், பூதிப்புரம், ஆதிபட்டி உட்பட பல்வேறு பகுதிகளில் கிணற்று பாசனம் மூலம் தோட்ட விவசாயம் நடைபெறுகிறது.இங்கு காய்கறி விளைச்சல் நல்ல முறையில் உள்ளதால் மார்க்கெட்டிற்கு காய்கறி வரத்து அதிகரித்துள்ளது.

தேனி உழவர் சந்தைக்கு நேற்று 65 விவசாயிகள், 4 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 30 டன் காய்கறிகளை கொண்டு வந்திருந்தனர். நேற்று உழவர்சந்தையில் 4158 பயனாளிகள் காய்கறிகளை வாங்கிச் சென்றனர். மார்க்கெட்டில் காய்கறிகள் தாராள வரத்து காரணமாக உழவர்சந்தையில் அனைத்து காய்கறிகளுமே விலை குறைந்து விற்பனை செய்யப்பட்டது.காய்கறி விலை நிலவரம், கிலோவிற்கு ரூபாயில்: தக்காளி- 6,புடலை- 10, கொத்தவரை- 9, பாகல்- 15, சுரை- 6, பீட்ரூட்- 10, பூசணி- 8, நூக்கல்- 10, தேங்காய்- 6, முள்ளங்கி- 8, பச்சைமிளகாய்- 16, முட்டைக்கோஸ்- 12, கத்தரி- 14, டர்னிப்- 13, வெண்டைக்காய்-

18, காலிபிளவர்- 10, பப்பாளி- 8, உருளைக்கிழங்கு- 24, சின்னவெங்காயம்- 24, காரட்- 28, பட்டர்பீன்ஸ்- 50, சோயாபீன்ஸ்- 45, மரவள்ளி- 8, கீரை- 5, மாம்பழம்- 25.

**மழை வேண்டி விவசாயிகள் பிரார்த்தனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2012,03:54 IST

தேனி:தேனி வீரப்ப அய்யனார் மலையடிவாரத்தில், அல்லிநகரம் விவசாயிகள் சங்கம் சார்பில் மழை வேண்டி பிரார்த்தனை நடந்தது. ஆவலூர் தாத்தா, வீரப்ப அய்யனார், கருப்பசாமி ஆகிய தெய்வங்களுக்கு சிறப்பு பூஜைகள், பிரார்த்தனைகள் நடத்தப்பட்டது. அன்னதானம் வழங்கப்பட்டது. விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் பாண்டியன், துணைத்தலைவர் வீரையாபிள்ளை, அல்லிநகரம் விவசாயிகள் சங்க தலைவர் அழகர்சாமி, பொருளாளர் முருகன், மாரியம்மன் கோயில் டிரஸ்டி சுப்புராஜ், லட்சுமிபுரம் கார்த்திகேயன், பொருளாளர் பரசுராம் பங்கேற்றனர்.

**அணையில் நீர் திறப்பு குறைப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2012,03:51 IST

கூடலூர்:பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் கடந்த சில தினங்களாக பெய்த சாரல் மழையால் நீர்வரத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து கடந்த ஒரு வாரமாக தமிழகப்பகுதிக்கு திறந்து விடும் நீரின் அளவு 467 கன அடியாக இருந்தது. இந்நிலையில், நீர்பிடிப்பு பகுதியில் மழை குறைந்துள்ளதால், மீண்டும் நீர்திறப்பு 100 கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது. அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 114.40 அடியாக இருந்தது.நீர்வரத்து 321 கன அடியாகம்.நீர் இருப்பு 1667 மில்லியன் கன அடியாகும்.பெரியாறில் 19.6, தேக்கடியில் 6.4 மி.மீ.,மழை பதிவாகியுள்ளது. நீர்பிடிப்பு பகுதியில் கூடுதல் மழை பெய்து நீர்வரத்து அதிகரித்தால் மட்டுமே தமிழகப்பகுதிக்கு கூடுதல் நீர் திறக்கும் வாய்ப்புள்ளது.

**கருகும் கடலை பயிர் கவலையில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2012,03:25 IST

சிங்கம்புணரி: சிங்கம்புணரி ஒன்றியத்தில் மழையின்றி கடலை பயிர் கருகுவதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர். கடந்த ஜூலையில் பெய்த மழையை வைத்து, எம். கோவில்பட்டி, பிரான்மலை, மேலப்பட்டி,எஸ். கோயில்பட்டி, எஸ்.எஸ்., கோட்டையில் மானவாரியாக நிலக்கடலை பயிரிட்டனர். நிலக்கடலை முளைத்து செடி வளரும் தருணத்தில்அறவே மழை இல்லை.வெயில் தாக்கத்தால் நூற்றுக்கணக்கான ஏக்கரில் நடவு செய்த கடலை பயிர் கருகி வருகிறது. விவசாயிகள் ஒவ்வொருவரும் ஏக்கருக்கு ரூ.5,000 வரை செலவு செய்தும், வருமானமின்றி தவிக்கின்றனர்.